## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | அய்யப்பன் | நாள் | 19.04.2023 |
| தகப்பனார் பெயர் | சிவசாமி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

17) என் சின்ன தாத்தா அப்புசாமியின் மகன் லிங்குசாமி அவர்களுக்கு தாவா சொத்தை ஒட்டி கிழக்கு புறம் அமைந்துள்ள அவரது நிலத்தை 2ம் பிரதிவாதி சிவசாமிக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். மேற்படி என் சின்ன தாத்தா அப்புசாமியின் மற்றொரு மகனான மயில்சாமி மேற்படி லிங்குசாமியின் நிலத்திற்கு ஒட்டினாற்போல் உள்ள தன்னுடைய நிலத்தை வேறு மூன்றாம் நபருக்கு விற்றுவிட்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

18) நான் சொல்வது பொய்யனாது என்றாலும், மேற்படி லிங்குசாமியின் நிலத்தை ஒட்டினாற்போல் கிழக்குபுறம் உள்ள தனது நிலத்தை மயில்சாமி மூன்றாம் நபருக்கு விற்ற விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் தற்போது வழக்கிற்காக அதுகுறித்து எனக்கு தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

19) 1ம் பிரதிவாதி பரமசிவத்தின் பாக நிலத்தை தற்போது 3ம் பிரதிவாதி பாஸ்கரும், அவரது சித்தப்பா கோவிந்தனும் தான் அனுபவித்து வருகின்றனர் என்றால் பரமசிவம் மேற்படி நிலத்தை 3ம் பிரதிவாதி பாஸ்கருக்கும், அவரது சித்தப்பா கோவிந்தனுக்கும் பிரித்துக்கொடுத்தார். மேற்படி கோவிந்தன் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். நான் பார்த்த வகையில் தற்போது மேற்படி நிலத்தை 2ம் பிரதிவாதி சிவசாமி தான் அனுபவித்து வருகிறார்.

20) மேற்படி கோவிந்தம் உயிருடன் இருந்த காலத்தில் தன் பாக நிலத்தில் சுமார் 40 செண்ட் நிலத்தை 2ம் பிரதிவாதி சிவசாமியின் மனைவி கிருஷ்ணவேணிக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

21) என் தாயார் பெயர் பொன்னி. என் தாயார் கடந்த 2000ம் வருடம் ச.எண்.194 ல் சுமார் 93 செண்ட் நிலத்தை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நிலம் 93

செண்ட்டிலிருந்து 94 செண்ட்டுக்குள் இருக்கும். என் தாயார் அவரது பெயரிலுள்ள நிலம் முழுவதும் என் பெயரில் தானசெட்டில்மெண்ட் அளித்துவிட்டார். மேற்படி நிலம் கூணாண்டியூரிலிருந்து மேச்சேரி பிரதான சாலைக்கு தெற்கில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

22) மேற்படி ச.எண்.194 ல் உள்ள சொத்திற்கு மேற்படி பிரதான தார்சாலையிலிருந்து தான் நாங்கள் சென்று வருகிறோம் என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.